செ.வெ.எண். 41/அக்டோபர்                                                    தேதி : 19.10.2016

## தருமபுரி மாவட்டம்

## வடகிழக்கு பருவ மழைக்காலங்களில் ஏற்படும் நோய்கள் வரும் முன் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் பேரிடர் மேலாண்மைக்குறித்து அனைத்துத்துறை அலுவலர்கள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!



தருமபுரி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிடத்தில் பேரிடர் மேலாண்மை குறித்து அனைத்துத்துறை அலுவலர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வடகிழக்கு பருவ மழையானது இன்னும் சில வாரங்களில் தொடங்கவுள்ளது. மழைக்காலங்களில் மழை நீர் தேங்குவதால் கடுமையான தலைவலி, கை, கால், மூட்டு வலி, தோலில் சிகப்பு தடிப்புகள் போன்றவை டெங்கு மற்றும் சிக்குன் குனியா நோய் வருவதற்கு அறிகுறியாகும். இந்நோயை பரவாமல் தடுப்பதற்கு மண்சட்டி, பிளாஸ்டிக் பொருட்கள், டயர் போன்ற பொருட்களில் மழைநீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்நோயை தடுப்பதற்கு நிலவேம்பு குடிநீர் மற்றும் தண்ணீரை மூடி வைத்து குடிக்க வேண்டும். கடுமையான குளிர், நடுக்கம், வயிற்று வலி போன்றவை மலேரியா வருவதற்கு அறிகுறியாகும். இந்நோயை தடுப்பதற்கு கொசு உற்பத்தி தடுப்பு, கொசு வலை மூடி தூங்கு வேண்டும். கண்கள் சிவந்திருத்தல் கடுமையான உடல் வலி எலிக்காய்ச்சல் வருவதற்கு அறிகுறியாகும். செருப்பு அணிவது, கைகளை கழுவுவது போன்றவை இந்நோயை தடுக்கும் முறையாகும். வயிற்றுப்போக்கு, வயிற்று வலி, நாக்குதடித்துப்போதல் என்பவை டைபாய்டு வருவதற்கு அறிகுறியாகும், இந்நோயை தடுக்கும் முறையாக தண்ணீரை காய்ச்சி, குளோரின் கலந்த தண்ணீர், சுத்தமான கழிவறை உபயோகிக்க வேண்டும். கடுமையான தொண்டை வலி மற்றும் கரகரப்பு மூச்சுவிடுதலில் சிரமம் ஏற்படுவது பன்றிக்காய்ச்சல்/பறவைக்காய்ச்சல் வருவதற்கு அறிகுறியாகும். இந்நோயை இருமும் போதும் தும்மும் போதும் மூக்கு வாயை மூடிக்கொள்ள வேண்டும் ஆகியவை நோய்களை தடுக்கும் முறைகளாகும். பொதுமக்கள் இம்முறைகளை பின்பற்றி மழைக்காலங்களில் ஏற்படும் நோய்களிலிருந்து தங்களை தற்காத்துக்கொள்ள வேண்டுமெனவும், மேலும் 24 மணி நேரமும்

இலவச மருத்துவ தகவல் மற்றும் ஆலோசனை பெற 104 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். மேலும் நீர்வழி தடங்கள் கழிவு நீர் கால்வாய்கள் ஆக்கிரமிப்புகளை அகற்றிட வேண்டும். நீர் நிலைகள், குளம், குட்டை அருகாமையில் குழந்தைகள் செல்லா வண்ணம் பள்ளி தலைமையாசிரியர்கள் குழந்தைகளுக்கு அறிவுறுத்த வேண்டும். பேரிடர் மேலாண்மை காலங்களில் பொதுமக்கள் பேரிடர் குறித்து புகார் தெரிவிக்க 1077, 1800 425 7016, 1800 425 1071 மற்றும் வாட்ஸ் அப் எண். 8903891077 என்ற எண்களுக்கு புகார் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) திரு. பஷீர், கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. மீ. செல்வகுமார் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.